நிலை வந்தது. எனவே அதை வனத்துறையே தொடங்குவது அல்லது அந்தத் தொழிற்சாலையை வனத் துறையே கட்டுவது என்பதைவிட அதில் அனுபவம் வாய்ந்த டான்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டு, அவர்களிடம் ஒப்படைத்து அவர்கள் அதைக் கட்டி முடித்து, வெள்ளோட்டம் விடுகிற வரை, அவர்கள் பொறுப்பிலேயே விடப்பட்டது. அவ்வாறு அவர்கள் கட்டி முடித்து இப்போது வனத் துறையிடம் தந்திருக்கிறார்கள். இதை வியாபார ரீதியில் நடத்த வேண்டியிருப்பதால், இதை வனத் துறைக் கழகத்திடம் ஒப்படைத்து, இந்தத் தொழிற்சாலை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே தொடக்கத்திலிருந்தே எப்படியாவது தமிழகத்தில் முதன் முறையாக சந்தன எண்ணெய் தொழிற்சாலையைத் தொடங்குவோம் என்கிற முயற்சியில் தாமதப்பட்டிருக்கிறதே தவிர வேறு தாமதம் இல்லை. அதனால் நட்டம் இருப்பதாக என்னிடம் தகவல் ஏதுமில்லை.

திருவக்கரையில் உள்ள சிவத்தலம்.

213. வினா.—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தென் ஆற்காடு மாவட்ட திருவக்கரையிலுள்ள சிவத்தலம், பராமரிப்பு இன்றி உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், இதனை புனரமைக்கும் கருத்தரு அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) மற்றும் (இ) ரூபாய் 50,000 மதிப்பீட்டில் திருப்பணி துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. அ. ப. சிவராமன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம் திருவக்கரையிலுள்ள அருள்மிகு சந்திர மௌளீஸ்வரர் திருக்கோயிலும் மற்றும் அங்கே உள்ள காளி கோயிலும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையும் சிறப்பும் வாய்ந்த திருக்கோயில்கள். அதற்கான இராஜ கோபுரத் திருப்பணி தற்போது நடைபெற்று வருகிறது. அத்துடன் மிகவும் சிறப்பு வாய்ந்த, கலைச் சிற்பங்களைக் கொண்ட தேர்வடிவில் அமைந்துள்ள மண்டபங்களிலும் புல்பூண்டுகள் முளைத்து, அதன் காரணமாக அவை பாழ்பட்டிருப்பதை அரசு அறியுமா? எனவே அவற்றின் பராமரிப்பையும் அரசு மேற்கொள்ளுமா ?

1986 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, இது ஒரு புகழ் பெற்ற திருத்தலம். புகழ்பெற்ற ஆலயம். ஆகவேதான் திருப்பணி செய்ய வேண்டும் என்று கமிட்டி அமைக்கப்பட்டு அதற்காக ரூபாய் 50,000 செலவில் மதிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-15)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற அந்தப் பணிகள் இந்த மதிப்பீட்டுக்குள் இல்லாது இருக்குமானால், அவைகளையும் அறநிலையத் துறை பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. அ. ப. சிவராமன்: பல ஆயிரம் ஆண்டுகளுக்குட்பட்ட மரங்கள் மண்ணில் புதைந்து கற்களாக மாறியிருப்பதை அங்கே காண முடிகிறது. மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் பிரிவு தன்னுடைய ஆளுகைக்குள் சில பகுதிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றது. அங்கே செலவழிக்கப்படும் ஐம்பதாயிரம் ரூபாய் என்பது அரசால் செலவழிக்கப்படுகிறதா, அல்லது மத்திய அரசின் நிதியுதவியும் அதில் கலந்திருக்கிறதா, மக்களிடமிருந்து நன்கொடை பெறப்பட்டதும் அதிலே கலந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: நீண்ட காலமாக மரங்கள் கல்லாக காட்சியளிக்கின்ற அந்தப் பகுதி மாத்திரம் மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையில் இருக்கிறது. ஆலயம் அல்ல. நம்முடைய பொறுப்பிலே ஆலயம் இருக்கிறது. மத்திய அரசின் நிதியுதவி இதற்கில்லை. இங்கேயே திருப்பணிக் குழு அமைக்கப்பெற்று, பொது மக்களிடமிருந்து வசூலிக்க வேண்டும். அப்படி முடியவில்லையானால், வேறு வசதிமிக்க ஆலயங்களிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய முடியும் என்ற அந்த அடிப்படையிலே இந்தத் திருப்பணி தொடங்கப்பெற்று வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இதே திருவக்கரையில் இந்தக் கோயிலுக்கு அருகில் இயற்கையாகவே பூமிக்கு அடியில் அமிழ்ந்த மரங்கள் கல்லாக ஆகியிருக்கின்றன. இந்த ஃபாசில்சை மத்திய அரசின் தொல்பொருள் இலாகா எடுத்து சரியான முறையில் பராமரிக்க சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. விலையுயர்ந்த இந்த ஃபாசில்ஸ் சிதைந்து போயிருக்கின்றன அல்லது களவாடப்பட்டிருக்கின்றன, அல்லது எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களைத் தவிர, நம்முடைய மாநிலத்திற்குச் சொந்தமாக பொது இடங்களிலும், தொல்பொருள் இலாக்காவின் கட்டுப்பாட்டுக்குள் வராத இடங்களிலும் மிகப் பெரிய பிரம்மாண்டமான மரங்கள் கற்களாக மாறி கேட்பாரற்றுக் கிடக்கின்றன. ஆகவே இதன் முக்கியத்துவத்தைக் கருதி

நம்முடைய மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, இப்பொருள்களை மாநில சுற்றுலா வாரியத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி, அதைப் பாதுகாத்து பலரும் கண்டுகளிக்கத் தக்க நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மத்திய அரசினுடைய தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதியில் எப்படி நடைபெறுகிறது என்பது குறித்து நமக்குத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கின்ற தகவலையொட்டி அவர்களுக்கு நாம் அறிவிப்புச் செய்து, அரசு தக்க பாதுகாப்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்பாடு செய்ய இயலும். நம்முடைய எல்லைக்குள்ளேயும் அப்படி இருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். அப்படி இருக்குமானால், உடனடியாக நம்முடைய மாநிலத்தினுடைய தொல்பொருள் ஆய்வுத் துறையின் ஆளுகைக்குக் கொண்டு வந்து பாதுகாக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், அந்தத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் பொறுப்பு என்னிடத்திலேதான் இருக்கிறது. ஆகவே உடனடியாக அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

பறவைகள், வனவிலங்குகள் சரணாலயங்கள்.

* 214. வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவையில் 24-1-1986 அன்று வினா எண் 36-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

24—1—1986 அன்றுள்ளபடி, தமிழ் நாட்டில், வனத் துறையினால் அறிவிக்கப்பட்டுள்ள, பறவைகள் மற்றும் வனவிலங்குகள் சரணாலயங்கள் எவை, எவை ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:

(1) முதுமலை வனவிலங்குச் சரணாலயம்;

(2) கோடியக்கரை வனவிலங்குச் சரணாலயம்;

(3) ஆனைமலை வனவிலங்குச் சரணாலயம்;

(4) முண்டந்துறை வனவிலங்குச் சரணாலயம்;

(5) களக்காடு வனவிலங்குச் சரணாலயம்;

(6) மூகுர்த்தி வனவிலங்குச் சரணாலயம்;

(7) வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்;